**ஐ.டி.எண்.9/2025** 06.02.2026

**தொ.த.சாட்சி 1 திரு. அன்வர் குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் டைவராக நிரந்தர தொழிலாளியாக பணிபுரிந்து வந்தேன். 2015-ம் ஆண்டில் நான் பணிக்கு சேர்ந்தேன் 2018-ல் இருந்து எனக்கு இ.எஸ்.ஐ மற்றும் இ.பி.எப் சந்தா தொகை பிடித்தம் செய்யப்பட்டது. பிடித்தம் செய்ததை காட்டுவதற்கான சம்பள ரசீதுகள் எதையும் நிர்வாகம என்னிடம அளிக்கவில்லை. சம்பள பட்டியல எதுவும் வழங்கப்படமாட்டாது. சம்பள பட்டியல் வழங்கப்படவில்லை என்று எனது மனுவில் நான் கூறியுள்ளேன். எனக்கு சம்பள பட்டியல் வழங்கப்படாதது குறித்து இ.எஸ்.ஐ மற்றும் இ.பி.எப் அதிகாரிகளுக்கு நான் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. நவம்பர் மாதம் 2021-ல் இருந்து எனக்கு நிர்வாகம் வேலை அளிக்கவில்லை. தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நிர்வாகம் எனக்கு வேலை தர மறுத்தது குறித்து நான் கடிதம் எதுவும் அனுப்பவில்லை. என்னுடைய சம்பளம் வங்கிக்கணக்கில் தான் செலுத்தப்பட்டது. வங்கி கணக்கை பார்த்தால் நான் எவ்வளவு நாட்கள் பணிபுரிந்தேன் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் 15.04.2020-ல் இருந்து உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வேலைக்கு செல்லாமல் நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மறுபடியும் என்னுடைய குடும்பசூழல் குறித்து நான் நிர்வாகத்திடம் கேட்டதின் அடிப்படையில் எனக்கு 01.05.2021 முதல் மீண்டும் பணி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மீண்டும் நான் 31.10.2023 முதல் எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் பணியில் இருந்து நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் வேலை தர மறுத்தது என்று நான் கூறியது பொய் என்றும் நான் பலமுறை வேலை கேட்டும் நிர்வாகம் தர மறுத்தது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பணப்பலனும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. நானாக 31.10.2023 முதல் வேலைக்கு வராமல் நின்றுவிட்டதால் எந்த ஒரு சலுகையும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.06 16:47:37 +0530